பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



# அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்


ஏசாயா-53:5

செய்தி மலர்
2020
ஏப்ரல்

இதழ் : 12
மலர் : 16



# சபை ஊழியரின் அன்பு மடல்



## உயிர்த்தெழுந்த இயேசு

கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த மார்ச் மாதம் முழுவதும் கண்மனி போல பாதுகாத்த தேவன் வரும் ஏப்ரல் மாதத்திலும் புதிய ஆசீர்வாதங்களையும், புதிய நன்மைகளையும் புதிய கிருபைகளையும் தந்து நம் சபையை வழி நடத்துவாராக.

பரிசுத்த யோவான் சொல்கிறார் "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார் அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாம்" என்று (I-யோவா-5:11)

மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்து உயிருள்ளவராய் பரலோகத்திற்கு ஏறிச்சென்ற இயேசு கிறிஸ்து இன்றைக்கும் பரிசுத்த ஆவியானவராக நம்மோடு வாசம் செய்துகொண்டிருக்கிறார். உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமை இன்றைக்கும் நம்மிடத்திலும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த வல்லமை என்ன ஆசீர்வாதங்களையெல்லாம் தருகிறது என்பதை கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

### 1. ஆவியின் கனி...

ஆவியின்கனியோஅன்பு,சந்தோஷம்,சமாதானம்,நீடியபொறுமை,தயவு,நற்குணம்,விசுவாசம்,சாந்தம்,இச்சையடக்கம் இப்படி பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும் ஒருவரையொருவர் கோபமூட்டாமலும் ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம். (கலா-5:22-26)

இயேசு சொன்னார் "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் வந்து பாவத்தைக்குறித்தும் நீதியைக்குறித்தும் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துவார். (யோவா-16:8,13)

 பிரியமானவர்களே, வேத வசனங்களை தியானித்து தேவனோடு சஞ்சரித்து தேவ பிரசன்னத்தில் தரித்திருக்கிற பிள்ளைகளை தேவன் பரிசுத்த ஆவியினால் நிறைக்கிறார். அந்த பரிசுத்த ஆவியானவர் ஒரு தேவ மனிதன் தவறு செய்கின்றபொழுது அவன் உள்ளத்திலே மனசாட்சியின் மூலமாய் பேசி உணர்வடைச் செய்து அவனை சீரான பாதைக்கு கொண்டு வருகிறார்.

அப்பொழுது உலகப்பிரகாரமான கோள் சொல்லுதல், புறங்கூறுதல், இரண்டகம் பண்ணுதல், பொய் சொல்லுதல், தர்க்கம் செய்தல், முரட்டாட்டம் பண்ணுதல், கீழ்படியாமை, பொறாமை கொள்ளுதல், சீற்றம், மூர்க்கம் பிடிவாதம், வைராக்கியம், சண்டை, பகைமை, கோபம், குற்றம் சொல்லுதல், பழிதீர்த்தல், மன்னியாமை, சந்தேகம், தூஷணம், வாக்குவாதம் இப்படிப்பட்ட செத்த கிரியைகளற நம்மை சுத்திகரித்து இவைகளுக்கு மாறாக மேற்சொன்ன ஆவியின் நற்குணங்கள் அனைத்தையும் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து நமக்கு தருகிறார். அல்லேலூயா.

நாமும் இயேசுவைப் போல மாறிப்போய்விடுவோம். அவர் சொன்னார் "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" என்று. (மத்–11:29)

உயிரோடு எழுந்து நித்திய நித்திய காலமாய் நம்மோடு கூட வாழ்ந்து கொண்டிருக்கும் இயேசு கிறிஸ்து தாமே ஆவியின் கனிகளை உங்களுக்கு தந்து உங்களை அலங்கரிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

## 1. ஆத்தும இரட்சிப்பு...

"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் நீ இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" (ரோம–10:9,10) "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப்–16:30) ஆம் பிரியமானவர்களே, எப்பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உயிருள்ள தெய்வம் என்று விசுவாசிக்கிறோமோ? அப்பொழுதே நாம் இரட்சிப்பு என்ற அனுபவத்தை அடைகிறோம்.

நம்முடைய பாவங்கள் குற்றங்கள் பரம்பரை சாபங்கள் எல்லாவற்றையும் ஆண்டவர் மன்னித்து விட்டார் என்ற நிச்சயத்தை அடைவதே இரட்சிப்பு என்பதாகும். "பாவிகளை இரட்சிக்க இயேசு கிறிஸ்து உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது"(1–தீமோ1:15) இந்த ஆத்தும இரட்சிப்பை நாம் பெற்றுக்கொள்ளுகின்றபொழுது வெளிச்சத்தின் பிள்ளைகளாய் மாறிப் போய்விடுகிறோம். பகலுக்குரியவர்களாகிய நாமோ? தெளிந்தவர்களாயிருந்து விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும் இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம். (1–தெச–5:8)

## 2. ஆவியின் வரங்கள்...

தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கை செய்கிறான். ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்துக்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தை போதிக்கும் வசனமும்

வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே அறிவை உணர்த்தும் வசனமும் வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே குணமாக்கும் வரங்களும் வேறொருவனுக்கு அற்புதங்களை செய்யும் சக்தியும் வேறொருவனுக்கு ஆவிகளை பகுத்தறிதலும் வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும் வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார்.

அதனால்தான் தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும் இரண்டாவது தீர்க்கதரிசிகளையும் மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும் பின்பு குணமாக்கும் வரங்களையும் ஊழியங்களையும் ஆளுகைகளையும் பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். (1-கொரி-12 அதிகாரம்) உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் ஆவி ஒரு மனிதனை செத்த கிரியைகளற சுத்திகரித்து ஆவியின் கனிகளை தந்து இரட்சித்து வரங்களை கொடுத்து தம் நாம மகிமைக்காக பயன்படுத்துகிறார்.

ஒரு காரியத்தை முக்கியமாய் செய்ய வேண்டும் என்று பவுல் கூறுகிறார். அது என்னவென்றால் இயேசுவைப் போல எல்லாரும் அன்பு என்ற அடிப்படையை வைத்தே எல்லா ஊழியங்களையும் செய்ய வேண்டும் என்பது மிகவும் அவசியமான காரியமாயிருக்கிறது. " நான் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும் அன்பு எனக்கிராவிட்டால் சப்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தையுடையவனாயிருந்து சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அடைந்தாலும் மலைகளைப் பெயர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. (1-கொரி-13:1,2)

## 3. நித்திய ஜீவன்...

குமாரனை உடையவன் ஜீவனையுடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும் தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும் (1-யோவா-5:12,13) என்று யோவான் குறிப்பிடுகிறார். தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான். இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ? அவன் அதை நித்திய ஜீவ காலமாய் காத்துக்கொள்வான் (யோவா-12:25)

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன் நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.(யோவா-14:1-6)

நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதை கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன். அதை கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன். (யோவா-10:17,18) தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்.

கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும் ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயுமிருக்கும்.

அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். (ரோம-8:9-11)

**"ஒன்றான மெய்த்தேவனையும் அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்"** (யோவா-17:3)

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே. என்னைக் குறித்து (இயேசு) சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே.(யோவா-5:39)

இயேசு மார்த்தாளை நோக்கி "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவா-11:25) என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு. மரித்தோர் தேவ குமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். ஏனெனில் பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராய் இருக்கிறது போல குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராய் இருக்கும்படி அருள் செய்திருக்கிறார். பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும் அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். (யோவா-5:21-29).

பிரியமானவர்களே, மரணத்தையும் பாதாளத்தையும் வென்று உயிரோடு எழும்பக்கூடிய அதிகாரத்தைப் பெற்ற இயேசு கிறிஸ்து நமக்குள் வாழ்கிற படியினால் அவர் சத்தம் கேட்டு அவர் சித்தம் செய்கிறவர்களாய் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை அர்ப்பணிப்போம். இரட்சிப்பின் அனுபவத்தை விசுவாசத்தினாலே பெற்று ஆவியின் கனிகளையும், வரங்களையும் சுதந்தரித்துக்கொண்டு இந்த உலகத்தில் சுடர்களாக பிரகாசித்து பின்பு நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ள நம் சபையை நிச்சயமாய் ஆசீர்வதிப்பார்.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் இந்த மாதம் முழுவதும் தங்கியிருப்பதாக.

கர்த்தரின் பணியில்,

அன்பு சகோதரன்,

எ.ஸ்டாலின்

சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்;
தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.
கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்;
பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்களின்
இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர்.
சங்கீதம் 41:1,2

# அமலேக்கை மேற்கொள்ளுங்கள்

இன்று நம் உள்ளான மனுஷனாகிய ஆத்துமாவோடே மாம்சமான சரீரம் ஒன்றாக கட்டப்படுகிறது. நமக்கு விரோதமாய் கிரியை செய்கிற அமலேக்கு தூரத்திலோ, வேறெங்கோயோ இல்லை! நம்மோடு கூடவே அது மாம்ச சிந்தையாய் இச்சையாக போராடி கொண்டிருக்கிறது. இந்த கூடாரத்திலே நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம், இந்த கூடாரத்திலே நாம் தவிக்க, நம்முடைய பரம வாசஸ்தலத்தை தரித்து கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாக இருக்கிறோம், (2 கொரி 5:2)

அருமையான தேவ பிள்ளைகளே! நாம் இந்த பூமியில் மாம்சத்தோடு இருக்கிறோம், நமக்குள்ளே ஆத்துமாவாகிய ஜீவன் உண்டு ஆவியானது மாம்சத்துக்கு விரோதமாகவும் இடைவிடாமல் போராடிக் கொண்டிருக்கிறது.

ஆனால் தேவதரிசனமுள்ள ஆவிக்குறிய தேவ ஜனங்கள் ஒரு போதும் தங்களை மாம்சத்தின்படி நடக்க ஒப்பு கொடுக்கமாட்டார்கள். மாம்ச சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாகும். மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். ஆவினாலே சரீரத்தின் கிரியைகளை அழித்தால் பிழைப்பீர்கள், இதுதான் அமலேக்காகிய மாம்சத்தோடு நமக்குள்ள யுத்தமாக இருக்கிறது.

வேதத்தை திறந்து பழைய ஏற்பாட்டிலுள்ள இந்த வேத பகுதியை வாசித்து பாருங்கள்.

அப்பொழுது மோசே யோசுவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்து கொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம் பண்ணு: நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்து கொண்டு நிற்பேன் என்றான். யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து , அமலேக்கோடே யுத்தம் பண்ணினான். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள்.

மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்: அவன் தன் கையை தாழ விடுகையில், அமலேக்கு மேற்கொண்டான்!

மோசேயின் கைகள் அசந்து போயிற்று, அப்பொழுது அவர்கள் ஒரு கல்லை கொண்டு வந்து அவன் கீழே வைத்தார்கள், அதின் மேல் உட்கார்ந்தான், ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்தில் மற்றொருவன் மறுபக்கத்தில் இருந்து அவன் கைகளை தாங்கினார்கள், இவ்விதமாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும் வரைக்கும் ஒரே நிலையாய் இருந்தது. யோசுவா அமலேக்கையும், அவன் ஜனங்களையும், பட்டயக்கருக்கினாலே முறிய அடித்தான்(யாத் 17:9-13)

மாம்சம் ஜெயங்கொள்ளுமா? அல்லது ஆவி ஜெயங்கொள்ளுமா? உலகம் மேற்கொள்ளுமா? அல்லது கர்த்தர் மேற் கொள்வாரா? பிசாசு பெரியவனா? அல்லது கர்த்தர் பெரியவரா? என்பதை இந்த போராட்டம் நிர்ணயிக்க கூடியதாய் இருந்தது.

வேதம் சொல்லுகிறது: நமது துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் எப்பொழுதும் யுத்தம் உண்டு என்பதை நாம் மறந்து போய்விடக்கூடாது (எபே 6:12)

மேலே சொன்ன வசனத்தை கவனித்து பாருங்கள்! இந்த யுத்தத்தில் இரண்டு பகுதிகள் இருக்கிறது. கீழே நின்று அமலேக்கும் யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேலரும் யுத்தம் செய்கிறார்கள்.அதே நேரத்தில் வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகள் அமலேக்கியரின் பக்கத்திலிருந்து அவர்களை பெலபடுத்தி கொண்டிருக்கிறபடியால் அவைகளை முறியடிப்பதற்காக மோசே தன் கையிலே தேவனுடைய கோலை ஏந்திக்கொண்டு மலையின் மேல் நின்று கொண்டிருக்கிறான்.

இந்த யுத்தத்தினுடைய வெற்றியின் இரகசியம், கிழே யுத்தம் செய்து கொண்டிருந்த போர் வீரர்களின் கையில் இருக்கவில்லை. இந்த வெற்றியின் இரகசியம் மலையின் உச்சியில் மோசே கைகளை வானத்திற்கு நேராய் உயர்த்துவதில் இருந்தது.

வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் போராடிக்கொண்டிருந்தபோது நாம் கர்த்தருக்கு நேராய் நம்முடைய உள்ளத்தை ஏறெடுத்து ஸ்தோத்தரித்து ஜெபிப்போம் என்றால் நமக்கு யுத்தம் செய்ய ஆவியானவரும் தேவ தூதர்களும் இறங்கி வருவார்கள்.

கீழேயுள்ள யோசுவாவின் பெலமும்,பராக்கிரமும், யுத்த சார்த்தியமும் அல்ல. இரதங்களின் திரட்ச்சியோ குதிரை வீரமோ அல்ல: அதினால் ஒரு போதும் ஜெயம் வருவதில்லை.

கர்த்தர் சொன்னார் "பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும்" (சகரியா 4:6)

நாம் செய்ய வேண்டியது என்ன?தாவீது சொல்கிறார். " உங்கள் கைகளை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக ஏறெடுத்து கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்." (சங் 134:2) "புருஷர்கள் பரிசுத்தமான கைகளை உயர்த்தி எல்லா இடங்களிலும் ஜெபம் பண்ண வேண்டுமென்று விரும்புகிறேன்( 1 தீமோ 2:8)

அமலேக்காகிய மாம்சத்தோடு யுத்தம் செய்து மேற்கொள்ள வேண்டுமென்றால் முக்கியமான 7 காரிங்களை நாம் கவனிக்க வேண்டும்.

### 1 மோசே அமர்ந்த கல் –:

மலையின் மேல் ஏறின் மோசே ஒரு கல்லின் மேல் அமர்ந்தான். அந்த கல்லை கொஞ்சம் சிந்தித்து பாருங்கள். அந்த கல்லில் அவன் சார்ந்து கொண்டான். அந்த கல் மோசேயை தாங்கினது.

அந்த கல்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவருடைய வசனங்கள். அவருடைய வார்த்தைகள் அவருடைய வாக்குதத்ததங்கள்.

இந்த பூமியிலே நாம் சார்ந்து கொள்ள கூடிய ஒன்று உண்டு என்றால் அது கிறிஸ்துவின் வார்த்தைகள்தான். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் அவருடைய வார்த்தை ஒரு போதும் ஒழித்து போவதில்லை.

ஜெபிக்கும் போது கர்த்தருடைய வசனத்தை பிடித்து கொண்டு அவருடைய வாக்குத்தத்தின்படி உரிமையோடு கேட்கும் போது கர்த்தரால் அதை மறுக்க முடியாது.

ஆண்டவரே உம்முடைய வசனத்தில் இவ்விதமாய் சொன்னீரே. இவ்விதமாய் எனக்கு வாக்குதத்தம் கொடுத்தீரே. உம்முடைய வாக்கு வாக்குத்தத்தத்தை நான் உறுதியாய் பற்றி கொண்டிருக்கிறேன் என்று கேட்கும் போது நிச்சயமாகவே கர்த்தர் நம்முடைய ஜெபத்துக்கு பதில் தருகிறவராய் இருக்கிறார்.

உதாரணமாக மத்தேயு 7:7ல் கேளுங்கள். அப்பொழுது உங்களுக்கு கொடுக்கபடும் என்று வாக்கு பண்ணியிருக்கிறாரே. கேட்கிற எவனும் பெற்று கொள்கிறான் என்று கூறி மீண்டும் அதை உறுதிபடுத்துகிறார் (மத் 7:8) நீங்கள் எவைகளை கேட்கிறீர்களோ அவைகளையெல்லாம் பெற்று கொள்வீர்கள். (மத் 21:22) விசுவாசமுள்ளவர்களாய் எவைகளை கேட்டாலும் பெற்று கொள்வீர்கள் (மத் 21:22)என் நாமத்தினாலே நீங்கள் எதை கேட்டாலும் அதை நான் நான் உங்களுக்கு செய்வேன் (யோவான் 14:14) என்றெல்லாம் நமக்கு வாக்கு பண்ணியிருக்கிறாரே.

நாம் சார்ந்து கொள்ளகூடிய கல் அதுதான். அவருடைய வாக்கு தத்தங்களை ஒரு போதும் அவர் மீறுவதில்லை அவர் பொய்யுறைக்க ஒரு மனுஷன் அல்ல. மனம் மாற அவர் மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்கள் எல்லாம் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது.

தேவ பிள்ளைகளே மாம்சத்தோடு நீ யுத்தம் செய்யும்போது வாக்குத்தத்தங்களை பற்றிக்கொண்டு உறுதியாக கர்த்தரிடத்தில் போராடி ஜெபம் பண்ணு. என் தேவனே நீர் மாம்சத்தில் இருந்த நாட்களில் என்னை போல எல்லாவற்றிலும் ரோசதிக்கபட்டீரே : என்னை போல பாடுள்ள மனுஷராயிருந்தீரே இப்பொழுது சோதிக்கபடுகிற எனக்கு இந்த வாக்குத்தத்தத்தின்படியே பெலன் தாரும் என்று மன்றாடு, கர்த்தர் உனக்கு உதவி செய்ய வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

( போராட்டம் இன்னும் தொடரும்)

**இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்;** ( ஏசாயா 43:19)

# 2020 மார்ச் மாத வேத வினாவுக்கு பதில்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1ஆ | சீ | ர் | வா | த2 | மா | ய் | | | | ன் |
| | | ய | | யை | | ரா | | ர் | வா | சோ3 |
| 4 பெ | த் | தே | ல் | | | 5சா | | வ | | த் |
| ன் | | ல் | | ம6 | கா | | | ன | | சா |
| ன | | 7க | ந் | த | க | ம் | | னா | | த் |
| ம் | சே8 | | | த் | | | | த | | அ9 |
| மி | | | | 10உ | ப் | பு | த் | தூ11 | ண் | |

## மேலிருந்து கீழ்

2. ஆதி 12:16
4. ஆதி 19:38

## கீழிருந்து மேல்

5. ஆதி 16:8
17. ஆதி 11:28
9. ஆதி 14: 7
10. ஆதி 20: 5
11. ஆதி 16: 7

## இடமிருந்து வலம்

3. ஆதி 14: 8
8. ஆதி 11: 10

## வலமிருந்து இடம்

1. ஆதி 12: 2
4. ஆதி 12: 8
6. ஆதி 15: 1
7. ஆதி 19: 24
10. ஆதி 19: 26

## 2020 மார்ச் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. சாந்தி
Sis. செலின் டேவிட்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. லதா கிருஸ்டோபர்
Sis. அனுஷா டினோ
Sis. எழிலரசி டேனியல்ராஜ்
Bro. எட்வின் ஞானதுரை

**அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.**

( சங்கீதம் 91:3)

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; ... " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஆன்ட்ரியா மக்தலேனா தாஸ்
சகோ. திவ்யராஜ்
செல்வன். ஜெரால்டு ஜெஸ்டின்
சகோதரி. பரமேஸ்வரி ஜெயசீலன்
சகோ. பால சுப்ரமணியன்
சகோதரி. ஷீஜா கிறிஸ்டோபர்
சகோ. பிராங்களின்
சகோ. ரிச்சர்ட்சன் டேனியல்
சகோ. ஜோசப் பீட்டர் ஜான் போஸ்கோ
சகோதரி. ஜமுனா சுப்பி ரமணி
சகோ. சத்தீஷ் ராஜேந்திரன்
செல்வன். மதன்ராஜ் மகேஷ்
செல்வன். ஆன்டர்சன் அறிவுச்சுடர்
செல்வி. தியா யாழினி
சகோ. ஜோசப் பாபுராஜ்
சகோதரி. சோபியா ஜோசப்
சகோ. அல்ஃபோன்ஸ் விஸ்வநாதன்
செல்வி. ஜோயன் ஜாஃப்ரீனா கனிஷ்
செல்வி. ஜோயன் ஹஃப்ரீனா கனிஷ்
சகோ. சுகுமார்
செல்வி. லிடியா வில்கின்ஸ்
சகோ.பென்சாம்
சகோ. குமாரசாமி
செல்வி. கிறிஸ்டினா வினீஷ்
சகோதரி. கலாராணி ஜெயக்குமார்.
சகோ. ஜீவல்சிங்
சகோ. பால் ஜெகநாதன்
சகோதரி. நிஷாந்தி விஜயன்
சகோதரி. பத்மினி வர்க்கீஸ்
சகோ. ரவி ஜாண் பீட்டர்
செல்வன். மோசே சத்தியநாதன்
செல்வி. வின்சி டேவிட்
செல்வன். விமல் டேவிட்
சகோ. கனிஷ் ஜோஸ்வா
செல்வன். ரான்கின் ஜீனு ராபின் ராஜ்
செல்வி. குமாரி ராஜன்
சகோ. எட்வர்ட் சந்தோஷ்
செல்வி. சாரோன் கீர்த்தனா கிறிஸ்டோபர்
சகோதரி. ரினி ரேச்சல் வில்ஸன்
சகோதரி. விஜயகுமாரி சுந்தரராஜ்
சகோதரி. சான்யா மேரி
சகோ. ஃபிராங்ளின் டினோ
சகோ. மகேஷ்ராஜ்
சகோதரி. லாவண்யா வினோத்
செல்வி. இபிஜா ஏஞ்சல் ஜெயக்குமார்
செல்வி. ஹான்ஸிகா சாம் ஆனந்த்
செல்வி. ஹெனா ஜோன் வினீஷ்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி/ திரு.அல்ஃபோன்ஸ் விஸ்வநாதன்
திருமதி/ திரு.சுதாகர்
திருமதி/ திரு.ஜெவல் சிங்
திருமதி/ திரு. ஸ்டீபன்
திருமதி/ திரு. அருண் இம்மானுவேல்
திருமதி/ திரு.பால் டேனியல்

# 2020 ஏப்ரல் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 08/04/2020 | Palm Sunday ( 17:00 t 18:30) | |
| 12/04/2020 | Easter Sunday (15:45 to 17:00) | |
| 19/04/2020 | சகோ. சுகுமார் | சகோ.பிரசாத் |
| 26/04/2020 | சகோ. பிராங்ளின் | சகோ. தாமஸ் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/04/2020 | சகோ.ஜோசப் | சகோ.கிருஸ்டோபர் |
| 10/04/2020 | Good Friday (15:45 to 18:00) | |
| 17/04/2020 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24/04/2020 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. சாமுவேல் தாசையா |

**09/04/2020** அன்று (Mandy Thursday ) (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் )–
நேரம் 17:30 to 19:00 மணிவரை

**24.04 2020** அன்று பொது மன்றம் இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு
நேரம் மாலை 6:30 முதல்

**18/04/2020** சனிக்கிழமையன்று மாதாந்திர பெண்கள் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(வேத வினா பகுதி நீதிமொழிகள் புத்தகத்தில் இருந்து)
(பொறுப்பெடுத்து நடத்துபவர் சகோதரி செலின் டேவிட் ஜெயகுமார் அவர்கள் குடும்பம்)

**24/04/2020** அன்று மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(சகோதரி . பிரிசில்லா ஆமோஸ் விஜயகுமார் அவர்கள் குடும்பத்தின் சார்பில்)
(வேத வினா பகுதி ஏசாயா புத்தகத்தில் இருந்து)

# 2020 ஏப்ரல் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1.முதியோரிடத்தில் ஞானமும் வயது சென்றவர்களிடத்தில் ———— இருக்குமே

2.நான் நீதிமானாயிருந்தாலும் அவரோடே வழக்காடாமல் என் நியாயாதிபதியிடத்தில் —— ——— கெஞ்சுவேன்

3. என்னை குற்றவாளியென்று தீர்க்காதிரும் நீர் எதினிமித்தம் என்னோடே வழக்காடுகிறீர், அதை எனக்குத் ———— என்பேன்

4. இனி அவர் உம்மடைய வாயை நகைப்பிலும் உம்முடைய உதடுகளைக் ———— நிரப்புவார்

5. நான் என்னை நீதிமானாக்கினாலும் என் வாயே என்னை குற்றவாளியாக்கும், நான் உத்தமனென்று சொன்னாலும், நான் ————என்று அது சாட்சிகொடுக்கும்

6. எது தன் ஆவியை காப்பாற்றினது என்று யோபு குறிப்பிடுகிறார்.?

7. யோபு 9ல் யோபு இல்லை என்று சொன்ன ஒன்று I தீமோ 2ல் பவுல் உண்டு என்று சொல்லுகிறார் அது என்ன?

8.யாருக்கு யோபு பேசுவது வீம்புவார்த்தை போல தெரிந்தது?

9. ஒருவன் சுத்தமும் செம்மையுமாய் இருந்தால் அவனுடைய வாசஸ்தலத்தை கர்த்தர் எப்படியாக்குவார்? துன்மார்க்கருடைய கூடாரம் என்னவாகும்?

10. கர்த்தர் ஜாதியை என்னென்ன பண்ணுகிறார் ?

11. ————உம்மிடத்தில் இருக்கிறது, உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்?

12. சிறுமைபட்டவனை அவனுடைய பலவானுடைய கைக்கும் சிறுமையும் எளிமையுமா-னவனைக் கொள்ளையிடுகிறவனுடைய கைக்கும் தப்புவிக்கிற உமக்கு ஒப்பானவர் யார் கர்த்தாவே என்று ———— சொல்லும்

13. என் நாவு உமது ———— நாள் முழுவதும் உமது ————சொல்லி கொண்டிருக்கும்

14. உமது நீதி———— போலவும் உமது ———— மகா ———— இருக்கிறது மனுஷரையும் மிருகங்களையும் ————?

விடைகளை வருகின்ற 20-04-2020க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரிலோ அல்லது வாட்ஸ் ஆப்பிலோ (whatsApps #66015503-withName)அனுப்பும்படி(கொடுக்கும்படி)கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை "**யோபு 8,9,10,11,12 சங்கீதம் 35,36** புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

# மிஷனரி செய்திகள்

## ரோலண்ட் பின்க்காம்
## (1872-1942)

மிஷனெரியாகச் சென்றபின் வியாதி பாடுகள் சோர்வுகளைப் பாத்து என்னால் இனி மிஷனெரிப பணி செய்ய இயலாது என்று இருமுறை தாயகம் திரும்பிவிட்ட ஒருவரைக் கொண்டு தேவன் மாபெரும் காரியங்களை நிகழ்த்த முடியுமா? ஆம் என்கிறது ரோலண்ட் பின்க்காமின் வாழ்க்கை வரலாறு. சூடான் உள்நாட்டு மிஷன் என்ற மிஷனெரி இயக்கம் இவரால்தான் உருவாக்கப்பட்டது.

ரோலண்ட் பின்க்காம் 1872-ம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில் பிறந்தார். நடுத்தரக் குடும்பமான இவர்களது குடும்பத்தில் அவரது தகப்பனாரின் மரணத்தினால் குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட தனது 13-வது வயதில் வேலைசெய்து தனது குடும்பத்தின் பாரத்தைச் சுமந்தார். அந்நாட்களில் இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். மூன்று வருடத்திற்குப் பிறகு கனடா தேசத்திற்கு வேலை நிமித்தம் சென்றபோது சுவிசேஷத்தை அறிவிப்பதே தனது முழு முதல் வேலை என்று தேவன் திட்டவட்டமாக உணர்த்துவதை அறிந்தார். அதனால் தேவப்பணி செய்ய இரட்சணியசேனை என்ற ஸ்தானத்தில் இணைந்தார்.

1893-ல் கப்பல் மூலம் சூடான் தேசத்திற்கு மிஷனெரியாக பணயப்பட்டார். அவருடன் தாமஸ் கேனட்டும் என்பவரும் புறப்பட்டார். ஆப்பரிக்காவின் லாகாஸ் என்ற இடத்தை அடைந்தவுடன் அங்கிருந்த மேற்கு ஆப்பிரிக்க மிஷனெரிகள் இவர்களை நோக்கி சூடான் தேசத்தில் உயிர் வாழ்வதே கடினம். அங்குள்ள மலேரியா போன்ற தொற்று வியாதிகள் வந்து உங்களைக் கொன்று விடும் என்றனர்.

இதனைக் கேட்டவுடன் இதுவரை ஒரு மிஷனெரிகூட சூடான் பகுதிக்குச் சென்று சுவிசேஷம் சொல்லவில்லை என்ற உண்மையை உணர்ந்துகொண்டு நாம் திரும்பி போகக்கூடாது என முடிவு எடுத்தனர். ஆனாலும் சூடானை நெருங்கும் போது ரோலண்டும் தாமஸும் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர். சிறிது நாட்களில் சுகம் பெற்றாலும் மீண்டும் மலேரியாவினால் தாமஸ் தாக்கப்பட்டு மரித்துப் போனார். இதைப் பார்த்தவுடன் ரோலண்டும் விசுவாசத்தில் தடுமாறி உடனே இங்கிலாந்து திரும்பிவிட்டார்.

இதைக்குறித்து ரோலண்டு தனது குறிப்பில் எழுதும்போது தேவன் பேரில் உள்ள எனது விசுவாசம் அடித்தளம்வரை ஆட்டம் கண்டது. இருளில் இருக்கும் மக்களுக்கு இயேசுவின் கடைசிக் கட்டளையான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத்தானே சென்றோம். ஆரம்பத்திலே இப்படிப்பட்ட கஷ்டமா? போன்ற பல கேள்விகள் எனது மனதைக் குடைந்தது. இறுதியாக உறுதியான கற்பாறையான தேவன்பேரில் விசுவாசம் வைக்கக் கற்றுக்கொண்டேன் என்கிறார். பின் இங்கிலாந்திலிருந்து கனடா தேசத்திற்கு வந்த அவர் சூடான் தேசத்திற்கு மறுபடியும் செல்ல ஆயத்தமானார்,பணித்தளத்தில் வாழ்வதற்கும் தேவபணி செய்வதற்கும்

தன்னை ஆயத்தப்படுத்தும் வகையில் இளநிலை மருத்துவப் படிப்பையும் நியூயார்க்கில் வேதாகமப் பள்ளியில் வேதாகமப் படிப்பையும் 1895–ல் படித்தார்.

1898–ம் ஆண்டு மே மாதம் சூடான் உள்நாட்டு மிஷன் என்ற மிஷனெரிச் சங்கம் நிறுவப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதே மாதத்தில், ஹெலன் பிளேயர் என்பவரைத் திருமணம் புரிந்தார். மீண்டும் 1900–ம் ஆண்டு பின்க்காம் தம்பதியினர் இரண்டு வாலிப தன்னார்வ ஊழியர்களுடன் சூடானை நோக்கிப் பயணமானார்கள். லூகாஸில் இறங்கியவுடன் மறுபடியும் மலேரியா தாக்கி அதிகமாய் நோய்வாய்ப்பட்டார். உடனே அவரை வீடு திரும்ப இயக்கம் உத்தரவிட்டது. அதிக சோர்வுற்ற ரோலண்ட் பின்க்காம் இப்படி நான் வீடு திரும்புவதற்குப் பதில் இறந்திருந்தால் கூட நலமாயிருக்கும் என்று எழுதுகிறார்.

சிறிது சிறிதாக சரீரத்தில் பெலன் பெற்ற ரோலண்ட் மறுபடியும் புதியதாக இணைந்த நான்கு மிஷனெரிகளுடன் சூடானை நோக்கி 1901–ல் பயணமானார். அவரது இந்த மூன்றாம் மிஷனெரிப் பயணம் வெற்றியாக அமைந்தது. பத்து வருட ஊழியத்திற்குப் பிறகு வெகு சிலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளாக மாறினர். சில புதிய பணித்தளங்களும் திறக்கப்பட்டது. அப்போது மலேரியா நோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அதுமுதல் மிஷனெரிகள் சூடான் ஆப்பிரிக்காப் பகுதிகளில் பயமில்லாமல் தங்கி ஊழியம் செய்ய ஆரம்பித்தனர்.

மிஷனெரிகள் அங்கு நிலைத்து இருந்ததற்கான மற்ற ஒரு முக்கிய ஆதாரம் ஜெப ஆதரவாளர்களின் ஜெபமே. பணித்தளத்தில் ஊழியம் செய்ய முடியாமல் தடுத்த மலேரியா நோய்க்கு அடுத்ததாக அந்தகார சக்திகள் பற்றிய மக்களின் பயம் மிகப்பெரிய தடையாக இருந்தது. சூடான் எத்தியோப்பியா பகுதிகளில் பேய்களையும், ஆவிகளையும் அதிகம் நம்பினர். தங்களைச் சுற்றிலும் பல பொல்லாத ஆவிகள் இருப்பதாகவும்அதிகம் நம்பினார்கள். அதனால் அவர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தைச் சொன்னபோது அதை நம்ப மறுத்தனர். சூன்யக்காரிகளும், மந்திரவாதிகளும் இவர்களது வாழ்வில் அதிக முக்கியத்துவம் பெற்றனர்.

ஆப்பிரிக்காவின் சூடான் பகுதியில் தொழு வியாதி அதிகம் பரவி இருந்தது. இந்த வியாதியை முழுவதும் நீக்க மிஷனெரிகள் பிரயாசப்பட்டனர். 1920–ம் வருடம் தொழு வியாதியஸ்தர் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட பணிமூலம் 30000 தொழு நோயாளிகளை நைஜீரியாவில் மட்டும் கவனித்து வைத்தியம் பார்த்தனர்.

இதில் அநேகர் இஸ்லாமியர் இவர்கள் தங்கள் குடும்பத்தின் எதிர்ப்பின் மத்தியிலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். ரோலண்டின் தியாக வாழ்வின் மூலம் ஊழியம் விரிவடைந்தது. எத்தியோப்பாவிலும் சென்று சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு திருச்சபை நாட்டப்பட்டது.

அன்பு சகோதரன்

ஏ.சுகுமாரன்

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.(1-பேது-5:7)

கிறிஸ்து இயேசுவின் இனிதான நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துகள்.

அன்பான சகோதர சகோதரிகளே தேவன் இந்த மார்ச் மாதத்தில் நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம் அவர் உங்களை விசாரிக்கிறவர் எனவே உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள் என்பதாக.

சாதாரணமாக மனிதன் பார்க்கும் வண்ணமாக பார்த்துவிட்டு அவனுக்கென்ன என்று சொல்லி கடந்து போகும் தேவன் அல்ல அவர். இருதயத்தில் வியாகுலங்களை அறிந்த தேவன் உலகத்தில் இருப்பவனை பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர் பெரியவர். அவர் நம்முடைய கவலைகளையெல்லாம் மாற்ற வல்லவராயிருக்கிறார்.
மார்த்தாள், மரியாள் என்று இரு சகோதரிகளை குறித்து லூக்கா 10-ஆம் அதிகாரத்தில் பார்க்கும்போது ஒரு நாள் இயேசுவானவர் அவர்களுடைய இல்லத்திற்கு வருகிறார். மார்த்தாள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து அநேக காரியங்களை குறித்து கவலைப்படுகிறாள். ஆனால் மரியாள் ஆண்டவருடைய பாதத்தின் அருகே அமர்ந்திருந்தாளாம். இதனைப் பார்த்த மார்த்தாள் இயேசுவிடம் என் ஆண்டவனே நான் என்ன செய்வதென்று அறியாமல் அநேக கவலைகளோடு தனியாக கஷ்டப்படுகிறேன் இவளை என்னோடு ஒத்தாசைக்கு வர சொல்லக்கூடாதா? என இயேசுவிடம் கூறுகிறாள்.

ஆனால் இயேசு சொல்கிறார், மார்த்தாளே நீயோ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்படுகிறாய். மரியாளோ தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள். நல்ல பங்காகிய அவருடைய பாதத்தை தெரிந்து கொண்டாள் மரியாள்.

நம்மிலும் சிலர் பல பிரச்சனைகளோடு காணப்படலாம் யார் வேதனையை மாற்ற முடியும்? யார் என் பிரச்சனைகளை தீர்ப்பது? என யோசித்து கொண்டிருக்கலாம். மரியாளை போல தேவனுடைய பாதத்தை பிடித்து கொள்ளுங்கள் அதுதான் பிரச்சனைகளின் தீர்வு.

ஒரு வேளை இன்று அநேகர் சொல்லலாம் நான் அனுதினமும் ஜெபிக்கிறேன் என் சொந்த தேவைக்காக நான் யாரிடமும் கையேந்துவதில்லை என் தேவனை நோக்கி தான் பார்க்கிறேன் ஆனால் என் ஜெபத்திற்கு பதில் வருவதில்லை என்று. வேதம் சொல்கிறது "வேதத்தை கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" (நீதி-28:9)

சங்கீதக்காரன் சொல்கிறான்,
"கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்" என்று

(சங்கீ–119:1)

அவர் உங்களை விசாரிக்கிறவர் எனவே அவர் விசாரிப்பார் என காத்திருப்பது நல்லதுதான். ஆனால் தேவன் நம் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நாம் அவருக்கு பிரியமாய் நடக்க வேண்டும். வேதத்தில் உள்ள வார்த்தைகளை பின்பற்றி நடக்க வேண்டும். தேவைகளை சொல்லி ஜெபிக்கிறோம் ஆனால் தேவன் நம்மை ஆசீர்வதிக்க நாம் தகுதியாய் இருக்கிறோமா? என அநேகர் சிந்திப்பது கிடையாது.

அவர் நம் கவலைகளை நம்மைவிட்டு அகற்றி நம்மை ஆசீர்வதிக்க நம்முடைய பாளையம் சுத்தமாயிருக்க வேண்டும்.

"உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரடச்சிக்கவும், உன் சத்துருக்களை உனக்கு ஒப்புவிக்கவும், உன் பாளையத்திற்குள்ளே உலாவிக் கொண்டிருக்கிறார். ஆகையால் அவர் உன்னிடத்தில் அசுசியான காரியத்தைக் கண்டு உன்னை விட்டுப் போகாதபடிக்கு உன் பாளையம் சுத்தமாயிருக்ககடவது. (உபா–23:14)

வேதம் தெளிவாக நமக்கு விளக்குகிறது. அவர் நம்மோடு கூட எப்பொழுதும் உலாவிக் கொண்டிருக்கிறார். ஆனால் நம் தேவைகளை தேவன் சந்தித்த போதும் பிசாசின் அந்தகார கிரியைகள் நம்மை தாக்காதபடி நம்மை தேவன் பாதுகாப்பதும் நாம் நம்முடைய பாளையத்தை அதாவது நம்முடைய இருதயத்தை சுத்தமாக வைத்திருப்பதில் தான் இருக்கிறது. அவர் தங்குகிற ஆலயமாகிய நம்முடைய இருதயத்தை நாம் பரிசுத்தமாக பார்த்துக்கொள்ளும்போது தேவன் நம் வாழ்க்கை குறித்ததை நிறைவேற்றுவார்.

என் கிறிஸ்துவுக்குள் அன்பான தேவனுடைய பிள்ளைகளே, நாம் வேண்டிக்கொள்வதற்கு முன்னமே நம்முடைய தேவையை நம்முடைய கவலைகளை அறிந்த தேவன் நம்மை விசாரிப்பதற்கும் நம்மை மேற்கொள்ள நினைக்கிற பிசாசானிடத்தில் இருந்து நம்மை விடுதலையாக்கவும் நம்முடைய பாளையத்தை சுத்தமாக வைத்திருப்போம். நம்முடைய கவலைகளையெல்லாம் அவர் மீது வைத்து விடுவோம். தேவன் நம்முடைய வாழ்க்கையில் அவர் குறித்ததை நிறைவேற்றுவார்.

"கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்து விடு அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாட விட மாட்டார்"

கர்த்தர் தாமே நம் அனைவரோடும் கூட இருப்பாராக. ஆமென்

வாலிபம் இயேசுவுக்கே.

# சத்துருவை மேற் கொள்ளுங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் இந்த மாத செய்தி மலர் மூலமாக தங்களை சந்திப்பதில் கர்த்தருக்குள் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்

கர்த்ததருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக!

சத்துருவை அழிப்பதற்காக தைரியசாலியாக நடந்து ஏற்ற நேரத்தில் சத்துருவுக்கு முடிவு உண்டாக்கின பெண்மணி கிறிஸ்து (நியாதி 4:9,17:22,5:24-27) பகுதியிலிருந்து சுருக்கமாக பார்ப்போம்.

யாகேல் ஒரு கேனியப் பெண்மணி இவள் கணவன் ஏபேர். இவள் இருக்கும் இடத்திலேயே எதிரியை வீழ்த்திய விராங்கனையாக செயல்பட்டார். ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கபட்டவள் என்று தீர்க்கதரிசி தெபேராவினால் புகழபட்டால் இவள் கானானிய அரசன் யாவீனின் படைதலைவகான சிசெராவின் நெற்றியில் ஆணியடித்து வீழ்த்தி வெற்றி கொடி நாட்டிய வீரபெண்மணி இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ததால் அவர்களை கானானியருடைய ராஜாவாகிய யாபீன் விற்று போட்டார். யாபீன் ராஜாவின் சேனாபதி சிசெரா இவன் இஸ்ரவேல் ஜனங்களை 20 வருடம் கொடுமையாக ஒடுக்கினான் எனவே அவர்கள் கர்த்தரிடம் முறையிட்டனர், இஸ்ரவேலருக்கு ராஜாக்கள் இல்லாத அந்நாட்களில் தெபோரால் என்ற பெண் தீரகதரிசி இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள் (நியா 4:2)இஸ்ரவேலருக்கும் கானானிய அரசன் யாபீனுக்கும் போர் மூண்டது.

அந்த போரில் சிசெரா என்ற சேனாபதி பாராக்கினால் தோற்கடிக்கபட்ட போது தன் இரும்பு ரதத்தில் இருந்து இறங்கி கால்நடையாய் எபேரின் மனைவி யாகாலுடைய கூடாரத்திற்கு ஓடி வந்தான் ஏபேலின் மனைவி யாகேல் சிசெரா என்ற சேனாபதி யுத்தத்தில் தோற்கடிக்கபட்டு கால் நடையாய் வரும்பொழுது தன்னுடைய கூடார வாசலில் நின்று அவனை வரவேற்றாள் என் ஆண்டவனே என்னன்டே உள்ளே வாரும் பயப்படாதேயும் என்று சொல்லி பவ்வியமாக மரியாதையாக பயபக்தியுடன், தன் கூடாரத்தின் உள்ளே அழைத்து போனாள், தந்திரமாய் ஜமுக்காளத்தினாலே மூடினாள், சிசெரா தாகமாக இருக்கிறான் என்று சொல்லி தண்ணீர் கேட்டான், கேட்டதற்கும் மேலாக பாலை கொடுத்தாள், அவள் குடித்த பின் திரும்பவும் மூடினால் அப்பொழுது அவன் தனக்கு அடைக்கலம் கொடுத்த யாகேலிடம் யாராவது என்னை தேடி வந்தால் இல்லை என்று சொல்ல சொல்லிவிட்டு நம்பிக்கையோடு தூங்கிவிட்டான் அவன் தூங்கிய பின் யாகேல்

உடனே ஞானமாய் தீவிரமாய் செயல்பட்டாள், ஒரு கூடார ஆணியை எடுத்தாள் சுத்தியினால் சிசேராவின் நெற்றியில் அந்த ஆணியை அடித்து போட்டாள். அது உருவிபோய் தரையில் புதைந்தது. நித்திரை மயக்கத்தில் இருந்தவன் செத்து போனான்.

தேசத்தையே தன் காலடியில் விழவைத்த சிசரோ யாகேலின் காலடியில் உயிரைவிட்டு பிணமாக கிடந்தான், நியாதிபதி 4:9ல் கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரியின் கையில் ஒப்பு கொடுப்பார் என்று தீர்க்கதரிசன வார்த்தை நிறைவேறிற்று, யாகேல் ஞானமாய் செயல்பட்டு வெற்றி பெற்றாள். சத்துருவை அழிப்பதற்கு தையிரியசாலியாய் இருந்தாள், தன் உயிரை பணயம் வைத்து இஸ்ரவேல் மக்களின் மீட்புக்காக தையிரியமாய் செயல்பட்டாள்.

யாகேல் கர்த்தருக்கு மட்டுமல்ல தேசத்துக்கும் தேசத்தின் படைத்தலைவனுக்கும் உண்மையும் பக்தி வைராக்கியமாய் இருந்தாள்.

யாக் 2:7 சொல்கிறது, ஆகையால் தேவனுக்கு கீழ்படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் ஆம்!. யாகேல் சத்துருவை கூடார ஆணியால், கொன்று ஜெயித்தது போல நாமும் இயேசு கிறிஸ்துவின் உதவியால் சத்துரு நம்மை சோதிக்கும் போது ஜெயித்து வெற்றி பெற வேண்டும். யாகேல், தெபேராவை போல, யுத்த களத்தில் செல்லா விட்டாலும், பெரிய காரியங்களை தேவ பெலத்துடன் தன் கூடாரத்தில் இருந்தே,சாதித்தாள், நாமும் கூட யாகேலை போல நம் இந்திய தேசத்தில் அறியாமையால் மூழ்கி கிடக்கும் மக்களுக்காக முழங்கால் யுத்தம் செய்யலாம்,

கர்த்தர்தாமே பெரிய கரியங்களை சாதிக்க உதவி செய்வாராக ஆமென்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

அனுபா டேனியில்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்திற்கு மகிமையுண்டாவதாக. செய்திமலர் பொருப்பாளரிடமிருந்து, தற்போதைய அசாதாரணமாண சூழ்நிலையில் உலகமெங்கும் இந்த Covid-19 என்று சொல்லகூடிய கொரோனா வைரஸ் மிகவும் கொடூரமான முறையில் தொட்ராக பறவிக் கொண்டு வருகிறது, இதை முக்கியமாக தவிர்க முதலில் சமுதாய கூடுதலை கைவிட இந்த நாட்டின் அரசு சில முக்கிய அறிவிப்புகளை அவ்வப்பொழுது அறிவித்து நடைமுறைபடுத்திக் கொண்டு வருகிறது இதில் முக்கியமான ஒன்று இந்த ஊரடங்கு இது முழுநேரமாக கூட வர வாய்ப்புகள் உள்ளன, எனவே வேதத்தில் ஆவியானவர் மூலமாக எழுதிய ரோமர்-13:2ல் அதிகாரத்திற்கு எதிர்த்து நின்றால் நமக்கு ஆக்கினை என்று வாசிக்கிறோம். ஆகவே இந்த நாட்டின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடந்து கொள்ள சபை மக்கள் அனைவரும் ஒத்துழைத்து மேலும் அந்த வைரஸ் தொட்ரு வளராமல் இந்த சங்கிலி தொடரை முறித்தெறிவோம்

Stay Safe Be Healthy நன்றி

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக
ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church ‘E’ mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only


அவர்
இங்கே
இல்லை;
தாம்
சொன்னபடியே
உயிர்த்தெழுந்தார்;
மத் 28:6